

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் சார்பாக, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் வாயிலாக மானியம் இல்லா குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கும் சிறப்பு தேர்வு முகாமினை, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில், இன்று (31.01.2017) துவக்கி வைத்து, விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டார். மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 83/2017 நாள்: 31.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் சார்பாக, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் வாயிலாக மானியம் இல்லா குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கும் சிறப்பு தேர்வு முகாமினை இன்று (31.01.2017) துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிய உதவிடும் வகையில், தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் (NHFDC) மூலம் கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 4 சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. அதில் முதல்கட்டமாக, இன்று (31.01.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முகாமை துவங்கி வைத்தார்.

இம்முகாமில், மாற்றுத்திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் சார்பாக, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் வாயிலாக மானியம் இல்லா குறைந்த வட்டியில் கடனுதவி வழங்க தேர்வு செய்யப்படுகிறது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், 2016-17ம் நிதியாண்டிற்கு மத்திய அரசின் பாரத பிரதமர் சுயவேலை உருவாக்கும் திட்டம் (PMEGP) ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ. 1,24,500/-க்கான (5 சதவீதம் மாற்றுத்திறனாளியின் பங்குத்தொகை) காசோலையினையும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ. 6 ஆயிரம் மதிப்பிலான செயற்கை அவயத்தையும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 17 ஆயிரம் மதிப்பிலான பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு உருபெருக்கிகளும் என மொத்தம் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 1,47,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், இணைப்பதிவாளர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு. நடுக்காட்டுராஜா, மாவட்டத்தொழில் மையம் பொது மேலாளர் திரு. மாரிமுத்து, உதவித்திட்ட அலுவலர்கள் (மகளிர் திட்டம்) திரு. ஆன்றனி சிலுவை, திருமதி. கலைச்செல்வி, திரு. ரவிக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.